www.padippakam.com

மக்கள் குரல்

NEWS

# இந்தியா ராணுவத்தை அனுப்பத்தேவை இல்லை: முகுந்தன் பேட்டி

## மக்கள் புரட்சியால் தமிழீழம் அடைவோம் என சூளுரை

பெங்களூர், மே. 18:

"ஆயுதம் தந்து எங்கள் கரத்தை வலுப்படுத்துங்கள்— சிங்கள சிப்பாய்களை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்" என்று தமிழீழ மக்கள் விடுதலை கழக செயல் அதிபர் உமா மகேஸ்வரன் (முகுந்தன்) தெரிவித்தார்.

வங்க தேச விடுதலையை இந்திய ராணுவம் பெற்றுத் தந்ததைப் போல, தனித் தமிழ் ஈழம் பெறுவதற்கு இந்திய ராணுவத்தை அனுப்ப வேண்டியதில்லை. எங்களை அங்கீகரித்து உதவி செய்தால், அனைத்து தரப்பு மக்களையும் ஒன்று திரட்டி மக்கள் புரட்சியை உருவாக்கி எங்கள் விடுதலையை நாங்களே பெற்றுக் கொள்வோம் என்றும் முகுந்தன் உறுதியுடன் கூறினர்.

பெங்களூரில் அவர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். ஒரு சில தமிழீழ விடுதலை இயக்கங்கள் நடத்தி வரும் அதிரடி தாக்குதல், கொரில்லா தாக்குதல் போன்றவைகளை முகுந்தன் ஆதரிக்கவில்லை. இத்தகைய தாக்குதல்கள் எதிர் விளைவுகளையே ஏற்படுத்தும் என்று முகுந்தன் சுட்டிக் காட்டினர்.

கொரில்லா தாக்குதல்களால் தமிழ் ஈழத்தை பெற்று விட முடியாது. ஒடுக்கப்பட்ட அனைத்து தொழிலாளர்களையும், விவசாயிகள், பாட்டாளிகள், மாணவர்கள், இளைஞர்கள் என்று அனைத்து தரப்பினரையும் ஒன்று திரட்டி பெருமளவில் மக்கள் புரட்சியை ஏற்படுத்துவதன் மூலம் தமிழீழத்தை பெற முடியும் என்பதில் தான் தமது இயக்கம் நம்பிக்கை கொண்டிருக்கிறது என்றும் முகுந்தன் தெளிவுபடுத்தினர்.

### 6 ஆயிரம் பேர் கொண்ட படை தயார்

தமிழீழமக்கள் விடுதலைக் கழகம் ஏற்கனவே 6 ஆயிரம் பேர் கொண்ட படை திரட்டியிருக்கிறது. கட்டுப்பாடுமிக்க இளைஞர்கள் இதில் உள்ளனர். அவர்களில் பலர் வெளிநாடுகளில் பயிற்சி பெற்றவர்கள் என்றும் முகுந்தன் கூறினர். தமிழ் நாட்டிலோ அல்லது இந்தியாவின் வேறு எந்த பகுதியிலோ இவர்கள் பயிற்சி பெறவில்லை என்பதையும் அவர் தெளிவுபடுத்தினர்.

### தமிழீழம் ஒன்றே வழி

இலங்கையில் தனித் தமிழீழம் கிடைப்பது ஒன்றே இலங்கை தமிழர் பிரச்சினைக்கு தீர்வாக அமையும் என்பதையும் அவர் உறுதிபட கூறினர். இலங்கை சுதந்திரம் அடைந்ததற்கு பிறகு அமைந்த எல்லா அரசுகளுடன் பேச்சு வார்த்தை நடத்தி, பல உடன்பாடுகள் ஏற்பட்டு இருக்கின்றன. அத்தகைய உடன்பாடுகளினால் தமிழர்களுக்கு எவ்விதத்திலும் பலன் ஏற்படவில்லை; அவர்களுக்கு உரிமை கிடைக்கவில்லை என்றும் முகுந்தன் சுட்டிக் காட்டினர்.

இப்போது நடந்து வரும் போராட்டம் சிங்கள மக்களை எதிர்த்து அல்ல என்பதையும் முகுந்தன் தெளிவுபடுத்தினர்.

---

உமா மகேஸ்வரன் விளக்கம்

# இலங்கை விடுதலை அமைப்புகள் இணைய முடியாதது ஏன்?

பெங்களூர், மே 17—

இலங்கையில் சுயாட்சி வேண்டிப் போராடும் தமிழ்ப் போராளிகள் தனித்தனியாக கொரில்லா தாக்குதலில் ஈடுபடுவதை விட, ஒருங்கிணைந்து போராடுவதையே தமிழ் ஈழ மக்கள் விடுதலைக் கழகம் விரும்புவதாக அதன் பொதுச் செயலாளர் உமா மகேஸ்வரன் இன்று கூறினார்.

பெங்களூரில் பொதுக் கூட்டம் ஒன்றில் அவர் பேசினார்.

போராட்டத் திட்டங்கள் வேறுபடுவதால் எல்லா போராளிகளும் இணைய முடியவில்லை. சென்ற பிப்ரவரியில் விடுதலைப் புலிகளை தவிர்த்து உள்ள மற்ற 6 அமைப்புகள் பேச்சு வார்த்தை நடத்தின. இணைந்து போராடுதவற்காக ஒருங்கிணைப்புக் குழு அமைக்கப் பட்ட சமயத்தில் சில அமைப்புகள் பிரிந்து சென்று விட்டன என்று அவர் கூறினார்.

எங்கள் அமைப்பு இன்னமும் ஒற்றுமையையே விரும்புகிறது. இலங்கைப் பிரச்னையில் இந்திய ராணுவம் தலையிடும் என்று நாங்கள் நினைக்கவில்லை. எங்களை நாங்களே விடுவித்துக் கொள்வோம். பாலஸ்தீன விடுதலை இயக்கத்தை அங்கிகரித்திருப்பதைப் போல தமிழீழ மக்கள் விடுதலை இயக்கத்தையும் இந்தியா அங்கிகரிக்க வேண்டுமென்றார் உமா மகேஸ்வரன்.

தந்திரங்களால் விடுதலையை வென்று விட முடியாது. ஏராளமானோர் போராடினால்தான் அது கிடைக்கும். எங்கள் போராளிகள் இலங்கைக்கு வெளியில் இருந்துதான் பயிற்சி பெற்று வருகின்றனர். ஆனால் அவர்கள் பயிற்சி பெறுவது இந்தியாவில் அல்ல என்றார் அவர்.

எங்களின் உண்மையான எதிரி சிங்கள ராணுவம் அல்ல. அரசை தீவிரமாக ஆதரித்து வரும் இஸ்ரேல், பிரிட்டிஷ் அமெரிக்கா ஆகிய அந்நியசக்திகளே எங்கள் எதிரிகள். இலங்கை பிரச்னை மனித உரிமைகளோடு தொடர்புடையது என்று கூறிய உமாமகேஸ்வரன் மாநில சட்டமன்றங்களை நோக்கி ஊர்வலங்கள் நடத்தி விடுதலை இயக்கங்களை இந்திய அரசு அங்கிகரிக்குமாறு செய்யுங்கள் என்று மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

தினமலர்
சனி மே 18 1985

படிப்பகம்